வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. செயலாளர் நியமிக்கப்பட்டு விட்டார்களா என்று அவர்கள் கேட்டார்கள். பாஸ்கரன் கமிஷனுக்குச் செயலாளராக திரு. கண்ணபிரான் அவர்கள், -Law Department- னுடைய அதிகாரிகளில் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்தக் கமிஷனுக்கு வேண்டிய உதவியாளர்கள் -Staff- கமிஷன் மூலமாக கோரப்பட்டு அவர்களையும் அரசு ஏற்கனவே கொடுத்துவிட்டது. நீதிபதி பாஸ்கரன் அவர்கள் நவம்பர் முதல் வாரத்தில் தன்னுடைய பணிகளைத் தொடங்குவதாக அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்.

(10.35)

(ஈ) சென்னையில் வழக்கறிஞர்கள் போராட்டம் தொடர இருப்பது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையில் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்றங்களுடைய நடவடிக்கைகளையெல்லாம் முடக்கக்கூடிய முறையில் வழக்கறிஞர்கள் ஒரு போராட்டத்தை நடத்தி, அது கடந்த புதன்கிழமை தற்காலிகமாக முடிவிற்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன் அவர்கள் இது தொடர்பாக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அதற்கு இசைவு மறுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அது குறித்து நீங்கள் எழுப்பலாகாது. (குறுக்கீடு).

திரு. உ. ரா. வரதராசன்: அவர்கள் சொன்னது வழக்கறிஞர் தாக்கப்பட்டது சம்பந்தமாக. ஆனால் நான் சொல்வது வழக்கறிஞர்கள் போராட்டம் சம்பந்தமாக. எனவே அந்த ஒரு வாரக் காலக்கெடு புதனன்று முடிவடைந்து, நாளையதினம் முதற்கொண்டு, மீண்டும் அந்தப் போராட்டம் தொடரக்கூடிய நிலையிருக்கிற காரணத்தாலே இது தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய ஒரு விவர அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாளையதினம் இந்த மன்றத்திலே வைக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே. விவரங்கள் மக்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் தெரியும் என்ற காரணத்தால், அறிக்கை தேவையில்லை.